**கவனிக்க.-** (i) *2019.06.14 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *பிரசுரிக்கப்படவில்லை.*

(ii) *இந்த வர்த்தமானியின் பகுதி* VI *இல் 2019 ஆம் ஆண்டிற்கான பொலநறுவை மாவட்டத்திற்குரிய நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2129 - 2019 ජූනි මස 21 වැනි සිකුරාදා - 2019.06.21**

*2129 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | |
|---|---|
| *சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்* | - |
| *சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்* | - |
| *அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்* | *1318* |
| *அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும்* | - |
| *நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும்* | - |
| *மற்றைய நியமனங்களும் பிறவும்* | - |
| *பதிவாளர் நியமனங்களும் பிறவும்* | - |
| *அரசாங்க அறிவித்தல்கள்* | *1318* |
| *விலைக் கட்டளைகள்* | - |
| *இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்* | - |
| *இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள்* | - |
| *வரவு செலவுத் திரட்டுக்கள்* | - |
| *அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்* | *1319* |
| *மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்* | - |


**கவனிக்க.-** (i) *குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டமூலம் 2019, யூன் மாதம் 14 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(ii) *உயர்கல்வி (தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகாரம்) சட்டமூலம் 2019, யூன் மாதம் 14 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படுந் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகுந் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2019, யூலை மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, யூன் மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டு மென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


*1317*-B *81534-403 (2019/06)*

## அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

*2019 இன் இல. 348*

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் உள்நாட்டு இறைவரிச் சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. ஏ. என். குருகே அவர்கள் 2018, நவெம்பர் மாதம் 19 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் அதிபதி பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

சுமித் அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

2019, மே 29.

6 - 586/1

*2019 இன் இல. 349*

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் இலங்கை நில அளவையாளர் சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. எஸ். எம். பி. பி. சங்கக்கார அவர்கள் 2019, மாச்சு மாதம் 26 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை இலங்கை நில அளவையாளர் திணைக்களத்தின் அளவையாளர் அதிபதி பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

சுமித் அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

2019, மே 29.

6 - 586/2

## அரசாங்க அறிவித்தல்கள்

### காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல் (அத்தியாயம் 120)

1. கீழ்க் குறிப்பிட்ட பட்டோலையில் காணப்படும் II ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் I ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமாக III ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின் கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.

2. 2019.06.21 தொடக்கம் 2019.07.05 ஆந் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு கொழும்பு காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.

3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமாக எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு எழுத்து மூலம் 2019.07.12 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

எமது இல. : ஆர்ஜீ/என்பீ/11/2/135/2018/ஏடு. தயா
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல.234/ஏ3, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் சிதைவடைந்த ஏடுகள் பற்றிய விபரங்கள்* | *காணி பற்றிய விபரம்* | *பதிவு செய்யப்பட்ட உறுதிகள் பற்றிய விபரம்* |
| கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு காணிப் பதிவகத்தின் வெள்ள பிரிவின் 80 ஆவது புத்தகத்தின் 273 ஆவது ஏடு. | மேல் மாகாணத்தின், கொழும்பு மாவட்டத்தின் பல்லே பற்று சல்பிட்டி கோறளையில் "மதன்கஹவத்த அல்லது கொரக்கஹவத்த" என்னும் காணிக்கு 1963.10.09 ஆந் திகதி அதிகாரம் பெற்ற அளவீட்டாளர் எச். அனில் பீரிஸ் அவர்களினால் அளவிட்டுத் தயாரிக்கப்பட்ட இலக்கம் 28 உடைய அளவீட்டின் காணித்துண்டு இலக்கம் "132F" இற்கான எல்லைகள் :-<br>வடக்கு : 132 E;<br>கிழக்கு : 132 G ;<br>தெற்கு : 157A 2A R 157 A 1 A ;<br>மேற்கு : 131 C ;<br>விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 12.50பே. | 1. எம். சீ. மொஹமட் பி. நொ. ஆல் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 1975.02.26 ஆந் திகதிய 1039 ஆம் இலக்கமுடைய அறுதி உறுதி.<br>2. வீ. எம். மாரபன பி. நொ. ஆல் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 1976.02.27 ஆந் திகதிய 504 ஆம் இலக்கமுடைய ஈட்டு உறுதி. |

6-650

# அரசாங்க பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## சம்பத் வங்கி பீஎல்சீ

( முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

வெகன்சா ரிசோட் அன்ட் கைட்சர்ஃபின் (பிறைவெட்) லிமிடெட்
கணக்கு இல.: 0088 1000 1942

2019, மாச்சு 28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:-

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு - 2, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசுவான என். எம். நாகொட வித்தான என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018, மாச்சு 08 ஆந் திகதியிடப்பட்ட இல. 2176 மற்றும் 2018, செத்தெம்பர் 21 ஆந் திகதியிடப்பட்ட இல. 2494 எனும் இரு ஈட்டு முறிகளின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடமைப்பட்டார் என்ற வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பெயர் மற்றும் வடிவில் "வெகன்சா ரிசோட் அன்ட் கைட்சர்ஃபின் (பிறைவெற்) லிமிட்டெட்" மற்றும் கடன்பட்டார் எனும் வகையில் வர்ணகுலசூரிய பெர்ணான்டோ தினேஷ் குமார என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், இலக்கங்கள் 2176 மற்றும் 2494 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாயில் மூன்று கோடியே பதினாறு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து நூற்று எண்பத்தெட்டு ரூபா எண்பது சதம் (ரூபா 3,16,58,188.80) 2019, பெப்புருவரி 21 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட மூன்று கோடியே பதினாறு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து நூற்று எண்பத்தெட்டு ரூபா எண்பது சதம் (ரூபா 3,16,58,188.80) 2019, பெப்புருவரி 22 ஆந் திகதி முதல் இலக்கங்கள் 2176 மற்றும் 2494 எனும் ஈட்டு முறிகளின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே ஐம்பது இலட்சம் ரூபா (ரூபா 1,50,00,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு எட்டு வீதம் (8%) மேலும் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் ரூபா (ரூபா 1, 50,00,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபத்தி மூன்று வீதம் (23%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள்

செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 2176 மற்றும் 2494 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

வட மேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், கல்பிட்டி பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவில் கண்டகுளி குடா கிராம அலுவலர் பிரிவில் கண்டகுளி குடாவில் அமைந்த "கண்டகுளி கொளனி" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். எஸ். சபார் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2017.08.24 ஆந் திகதியிடப்பட்ட இல. 4420A எனும் வரைபடத்தில் அனைத்து பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: லொட் 4 (பிரதேச சபை வீதியின் ஒரு பகுதி); கிழக்கு : லொட் 3 (பிரவேச வழி) மற்றும் லொட் 2 ; தெற்கு: லொட் 2 மற்றும் லுசீடா மற்றும்; மேற்கு: சீமோன் ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு றூட்கள் முப்பத்தியிரண்டு தசம் மூன்று பேர்ச் (00ஏ. 2றூ. 32.3பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 4420A எனும் வரைபடத்திற்கு அமைவாக புத்தளம் காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் D/ Ka/ 4/ 132 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

விசேட பந்தி

1. இக்காணியிலும் அதன் மீதும் அதற்கு சொந்தமான அனைத்து கனிமப் பொருட்களை அகழ்தல், தேடுதல், அவை தொடர்பான செயல்கள் மற்றும் அவற்றை கொண்டு செல்லுதல் அகற்றுதல் தொடர்பாகவுள்ள சட்டப்படியான உரிமை (இவ் அங்கீகரிக்கப்பட்ட பிரதான நிபந்தனைக்கு அமைவாக மாணிக்கக் கற்கள் உட்பட கனிமங்களும் உட்படுத்தப்பட்டுள்ளது) அரசு சார்பானது.

2. இச் சொத்திற்குரிய உரிமையாளருக்கான சட்டப்படியான உரிமை, இவ் மானிய திகதிக்கு சொத்தின் மீது உள்ள வீதி மற்றும் ஏனைய உரிமைகள் மற்றும் ஏனைய தேவைகளுக்குரிய மார்க்க உரிமைகள் உட்பட,

நிபந்தனைகள்

1. (ஹெக்டயார் 0.0379) - ஹெக்டயார்/ஏக்கர் உயர் நிலம் - ஹெக்டயார்/ஏக்கர் நீர்ப்பாசன காணியைப் போன்ற இங்கு குறிப்பிடப்பட்ட உப பிரிவுகளின் அலகுகளின் அளவுகளுக்கு குறைவாகவுள்ள பிரிக்கப்பட்ட சொத்தின் ஒரு பகுதியை அகற்றுதல் உரிமையாளரினால் மேற்கொள்ளப்படல் ஆகாது.

2. 1/9 பகுதியான , இங்கு குறிப்பிடப்பட்டுள்ள குறைந்த பட்ச பகுதிக்கு மேல் குறைவாகவுள்ள இச் சொத்தின் பிரிக்கப்படாத பகுதியை அகற்றுதல் உரிமையாளரினால் மேற்கொள்ளப்படல் ஆகாது.

3. நிபந்தனை 01 இல் குறிப்பிடப்பட்ட உப பிரிவு அலகொன்றிற்கு குறைவாகவுள்ள இச் சொத்தின் பிரிக்கப்பட்ட துண்டிற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக முடியாது.

4. நிபந்தனை 02 இல் குறிப்பிடப்பட்ட உப பிரிவு அலகொன்றிற்கு குறைவாகவுள்ள இச் சொத்தின் பிரிக்கப்படாத துண்டிற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக முடியாது.

5. நிர்மாண விதிகளுக்கமைவாக தற்போது நிர்மாணிக்கப் பட்ட அல்லது இனிமேல் நிர்மாணிக்கப்படவுள்ள நீர்ப்பாசன செயல்பாட்டின் மூலம் நீர்ப்பாசனத்தை வழங்கக்கூடிய அல்லது நீர்ப்பாசனத்தை வழங்கக்கூடிய விதத்தில் அமையக்கூடிய இச் சொத்து அல்லது அதன் ஒரு பகுதியாகவுள்ள நீர்ப்பாசனத்தை வழங்கக்கூடியவாறு அமைந்த பிரதேசத்துடன் தொடர்பான நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 453) விதிகளுக்கு அமைவாக மற்றும் அதில் உட்படுத்தப்பட்ட எந்தவொரு சட்டதிட்டங்களை பின்பற்றி செயல்படுத்துவதற்கு உரிமையாளர் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

6. உரிய அரச அதிகாரியின் எழுத்து மூல அனுமதி மற்றும் குறித்த அதிகார சபையின் அனுமதிப் பத்திரத்தை பெற்றிருக்காவிட்டால் இக் காணியின் அல்லது அதன் மீது அல்லது அதற்கு சொந்தமான அல்லது எந்தவொரு கனிம அகற்றுதல் அல்லது வேறு விதத்தில் அகழ்தல் தேடுதல் பெற்றுக்கொள்ளுதல் தானே உபயோகித்துக் கொள்ளல் அல்லது விற்பனை செய்தல் உரிமையாளரினால் மேற்கொள்ளப்படல் கூடாது

7. உரிய பிரதேச செயலாளரின் எழுத்து மூல பூரண அனுமதி தவிர்ந்த இச் சொத்து இங்கு எந்தவொரு பகுதியையேனும் அல்லது கையளித்தலையேனும் மேள்கொள்ளக் கூடாது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

6- 682/1

---

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

394(3) ஆம் பிரிவின் கீழான "எமிகோ இன்டஸ்ட்ரீஸ் (பிரைவட்) லிமிட்டட்" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2008.12.16 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "எமிகோ இன்டஸ்ட்ரீஸ் (பிரைவட்) லிமிட்டட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு அறிய முடிகிறது.

அவ்வாறு இயங்காமல் இருப்பதற்கு தகுந்த காரணங்கள் காட்டப்படாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "எமிகோ இன்டஸ்ட்ரீஸ் (பிரைவட்) லிமிட்டட்" எனும் பெயர் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி கலைக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.

தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவீ 66518
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
இல. 400, டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2019, மே 25.

6-575

---

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

394(3) ஆம் பிரிவின் கீழான "எக்ஷன் புரோ செக்கியூரிட்டி என்ட் டெக்னொலொஜிஸ் (பிரைவட்) லிமிட்டட்" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2009.05.29 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "எக்ஷன் புரோ செக்கியூரிட்டி என்ட் டெக்னொலொஜிஸ் (பிரைவட்) லிமிட்டட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு அறிய முடிகிறது.

அவ்வாறு இயங்காமல் இருப்பதற்கு தகுந்த காரணங்கள் காட்டப்படாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "எக்ஷன் புரோ செக்கியூரிட்டி என்ட் டெக்னொலொஜிஸ் (பிரைவட்) லிமிட்டட்" எனும் பெயர் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி கலைக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.

தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவீ 67942
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
இல. 400, டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2019, மே 25.

6-576

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

394(3) ஆம் பிரிவின் கீழான "ஹேரண்ட்ஸ் லங்கா ஓஷன் பிரெஷ் (பிரைவட்) லிமிட்டட்" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2017.05.25 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "ஹேரண்ட்ஸ் லங்கா ஓஷன் பிரெஷ் (பிரைவட்) லிமிட்டட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு அறிய முடிகிறது.

அவ்வாறு இயங்காமல் இருப்பதற்கு தகுந்த காரணங்கள் காட்டப்படாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "ஹேரண்ட்ஸ் லங்கா ஓஷன் பிரெஷ் (பிரைவட்) லிமிட்டட்" எனும் பெயர் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி கலைக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.

தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவீ 122556
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
இல. 400, டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2019, மே 25.

6-577

---

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

394(3) ஆம் பிரிவின் கீழான "ஸ்பைலோவா அந்தூ ரிகல்ச்சர் (பிரைவட்) லிமிட்டட்" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2010.03.12 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "ஸ்பைலோவா அந்தூரிகல்ச்சர் (பிரைவட்) லிமிட்டட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு அறிய முடிகிறது.

அவ்வாறு இயங்காமல் இருப்பதற்கு தகுந்த காரணங்கள் காட்டப்படாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "ஸ்பைலோவா அந்தூரிகல்ச்சர் (பிரைவட்) லிமிட்டட்" எனும் பெயர் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி

கலைக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.

தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவீ 71486
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
இல. 400, டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2019, மே 25.

6-578

---

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

### 394(3) ஆம் பிரிவின் கீழான "பரணவித்தான கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (பிரைவட்) லிமிட்டட்" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2012.05.15 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "பரணவித்தான கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (பிரைவட்) லிமிட்டட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு அறிய முடிகிறது.

அவ்வாறு இயங்காமல் இருப்பதற்கு தகுந்த காரணங்கள் காட்டப்படாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "பரணவித்தான கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (பிரைவட்) லிமிட்டட்" எனும் பெயர் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி கலைக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.

தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவீ 85952
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
இல. 400, டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2019, மே 25.

6-579

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

### 394(3) ஆம் பிரிவின் கீழான "அமான்டீப் லங்கா (பிரைவட்) லிமிட்டட்" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2012.03.13 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "அமான்டீப் லங்கா (பிரைவட்) லிமிட்டட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு அறிய முடிகிறது.

அவ்வாறு இயங்காமல் இருப்பதற்கு தகுந்த காரணங்கள் காட்டப்படாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "அமான்டீப் லங்கா (பிரைவட்) லிமிட்டட்" எனும் பெயர் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி கலைக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.

தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவீ 84810
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
இல. 400, டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2019, மே 25.

6-580

---

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

### 394(3) ஆம் பிரிவின் கீழான "சேனாரத்ன பிளான்டேஷன்ஸ் (பிரைவட்) லிமிட்டட்" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2000.06.02 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "சேனாரத்ன பிளான்டேஷன்ஸ் (பிரைவட்) லிமிட்டட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு அறிய முடிகிறது.

அவ்வாறு இயங்காமல் இருப்பதற்கு தகுந்த காரணங்கள் காட்டப்படாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "சேனாரத்ன பிளான்டேஷன்ஸ் (பிரைவட்) லிமிட்டட்" எனும் பெயர் கம்பனிகள் பதிவாளர்

*திணைக்களத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி கலைக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.*

*தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன,*
*கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.*

*பீவீ 18483*
*கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,*
*இல. 400, டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,*
*கொழும்பு 10,*
*2019, மே 25.*

*6-581*

---

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

### 394(3) ஆம் பிரிவின் கீழான "சிலோன் ஜூவெல் ஹோல்டிங்ஸ் (பீவீஉ) எல்டீடி" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2014.02.12 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "சிலோன் ஜூவெல் ஹோல்டிங்ஸ் (பீவீஉ) எல்டீடி" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு அறிய முடிகிறது.*

*அவ்வாறு இயங்காமல் இருப்பதற்கு தகுந்த காரணங்கள் காட்டப்படாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "சிலோன் ஜூவெல் ஹோல்டிங்ஸ் (பீவீஉ) எல்டீடி" எனும் பெயர் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி கலைக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.*

*தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன,*
*கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.*

*பீவீ 97007*
*கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,*
*இல. 400, டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,*
*கொழும்பு 10,*
*2019, மே 25.*

*6-582*

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

### 394(3) ஆம் பிரிவின் கீழான "ஸ்கை பார்க் புரொப்பர்டி டிவெலொப்பர்ஸ் (பீவீஉ) எல்டீடி" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2013.09.20 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "ஸ்கை பார்க் புரொப்பர்டி டிவெலொப்பர்ஸ் (பீவீஉ) எல்டீடி" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு அறிய முடிகிறது.*

*அவ்வாறு இயங்காமல் இருப்பதற்கு தகுந்த காரணங்கள் காட்டப்படாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "ஸ்கை பார்க் புரொப்பர்டி டிவெலொப்பர்ஸ் (பீவீஉ) எல்டீடி" எனும் பெயர் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி கலைக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.*

*தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன,*
*கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.*

*பீவீ 94616*
*கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,*
*இல. 400, டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,*
*கொழும்பு 10,*
*2019, மே 25.*

*6-583*

---

## சம்பத் வங்கி பீ. எல். சீ.

( முன்பு சம்பத் வங்கி லிமிட்டட் என அழைக்கப்பட்டது)

### 2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

*ரீ. ஏ. ஐ. குணபால மற்றும் கே. எஸ். பிரியதர்ஷனி*
*கணக்கு இல.: 0166 5000 3121*

*2019, ஏப்பிறல் 25 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:-*

PQ *144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு - 2, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110*

இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசுவான கே. ஏ. டீ. சுபசிங்ஹ என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015, ஏப்பிறல் 10 ஆந் திகதியிடப்பட்ட இல. 2442, 2016, மாச்சு 11 ஆந் திகதியிடப்பட்ட இல. 3243, 2017, திசெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 4773, 2018, மாச்சு 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 4949 மற்றும் 2017, திசெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 4775 எனும் ஈட்டு முறிகளின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடமைப்பட்டுள்ளார் எனும் வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் துப்பைஹிகே அமில இந்திக குணபால மற்றும் கோராலலாகே சுனேத்ரா பிரியதர்ஷினி என்பவர்களில் கடன்பட்டவர் எனும் வகையில் துப்பைஹிகே அமில இந்திக குணபால என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால்,

PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு - 2, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசுவான கே. ஏ. டீ. சுபசிங்ஹ என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017, திசெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 4777 எனும் ஈட்டு முறி மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடமைப்பட்டுள்ளார் எனும் வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் துப்பைஹிகே அமில இந்திக குணபால மற்றும் கோராலலாகே சுனேத்ரா பிரியதர்ஷினி என்பவர்களில் கடன்பட்டவர் எனும் வகையில் கோராலலாகே சுனேத்ரா பிரியதர்ஷினி என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால்,

இலக்கங்கள் 2442, 3243, 4773, 4949, 4775 மற்றும் 4777 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாயில் ஆறு கோடியே இருபத்தொரு இலட்சத்து பதினான்காயிரத்து முந்நூற்று பத்து ரூபா இருபது சதம் (ரூபா 6,21,14,310.20) 2019, மாச்சு 26 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட ஆறு கோடியே இருபத்தொரு இலட்சத்து பதினான்காயிரத்து முந்நூற்று பத்து ரூபா இருபது சதம் (ரூபா 6,21,14,310.20) 2019, மாச்சு 27 ஆந் திகதி முதல் இலக்கங்கள் 2442, 3243, 4773, 4949, 4775 மற்றும் 4777 எனும் ஈட்டு முறிகளின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை பன்னிரெண்டு இலட்சம் ரூபா (ரூபா 12,00,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினான்கு தசம் ஐந்து வீதம் (14.5%) மேலும் ஐந்து கோடியே அறுபத்தி எட்டு இலட்சத்து ஐம்பத்தி நான்காயிரம் ரூபா (ரூபா 5,68,54,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) மேலும் எட்டு இலட்சம் ரூபா (ரூபா 8,00,000.00) at the rate of Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு மூன்று வீதம் (3%) (Floor rate of 12%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 2442, 3243, 4773, 4949, 4775 மற்றும் 4777 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீள் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

1. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கட்டுகம்பொல மெதபற்று - மேற்கு கோரலே கட்டுகம்பொல ஹத்பத்துவின் பன்னல பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் மோஹோத்தாவ எனும் கிராம அலுவலர் பிரிவின் பாஹால மோஹோத்தாவ கிராமத்தில் அமைந்த "நுககாஹாமுலஹேன" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. கே. பீ. ஒக்கந்தபொல என்பவரால் தயாரிக்கப்பட்ட 2014, ஒற்றோபர் 18 ஆந் திகதியிடப்பட்ட இல. 405/ 2014 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் 7A என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஆர். ரத்நாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2002, ஓகத்து 10 ஆந் திகதியிடப்பட்ட இல. 1028 எனும் வரைபடத்தில் லொட்கள் 2 மற்றும் 1 மற்றும் வீதி (பிரதேச சபை) ; கிழக்கு : மேற்கூறப்பட்ட 1028 எனும் வரைபடத்தில் லொட் 8 ; தெற்கு : 1028 எனும் வரைபடத்தில் லொட்கள் 8 மற்றும் 10 மற்றும் மேற்கு : FVP 345 ஏராபொல கிராமத்து எல்லை மற்றும் FVP 343 இன் லொட் 2G ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் மூன்று ஏக்கர் மற்றும் பதினொன்று தசம் எட்டு பேர்ச் (3ஏ. 0றூ. 11.8பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 405/ 2014 எனும் வரைபடத்திற்கு அமைவாக குளியாப்பிட்டிய காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் E 109/57 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட இல. 1028 எனும் வரைபடத்தின் லொட்கள் 3 மற்றும் 8 இன் மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

(இலக்கங்கள் 2442 மற்றும் 3243 எனும் ஈட்டு முறிகளின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.)

2. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கட்டுகம்பொல மெதபத்து - மேற்கு கோரலே கட்டுகம்பொல ஹத்பத்துவின் பன்னல பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் மோஹோத்தாவ எனும் கிராம அலுவலர் பிரிவின் பாஹால மோஹோத்தாவ கிராமத்தில் அமைந்த "நுககாஹாமுலஹேன" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் வை. எம். ஆர். யாப்பா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2010, மே 23 ஆந் திகதியிடப்பட்ட இல. 11915 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: வீதி (நெடுஞ்சாலை) களனியமுள்ள முதல் ஹமன்கள்ள வரை ; கிழக்கு : வீதி ; தெற்கு: இன்கராதாவுல அரச பாடசாலையின் காணி மற்றும் வளவுகள் மற்றும் ; மேற்கு : இன்கராதாவுல அரச பாடசாலையின் காணி மற்றும் வளவுகள் ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் முப்பத்தி ஐந்து தசம் எட்டு பேர்ச் (0ஏ. 1றூ. 35.8பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 11915 எனும் வரைபடத்திற்கு அமைவாக குளியாப்பிட்டிய காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் E 219/88 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட இல. 11915 எனும் வரைபடத்தின் கூறப்பட்ட காணியின் கிழக்கு எல்லையாக காட்டப்பட்ட வீதியின் மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

(இலக்கங்கள் 4773 மற்றும் 4949 எனும் ஈட்டு முறிகளின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.)

3. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கட்டுகம்பொல மெதபத்து - மேற்கு கோரலே கட்டுகம்பொல ஹத்பத்துவின் பன்னல பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச சபை செயலாளர் பிரிவின் மோஹோத்தாவ எனும் கிராம அலுவலர் பிரிவின் பாஹால மோஹோத்தாவ கிராமத்தில் அமைந்த "நுககாஹாமுலஹேன" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் எச். ஏ. எம். சீ. பண்டார என்பவரால் தயாரிக்கப்பட்ட 2014, மே 03 ஆந் திகதியிடப்பட்ட இல. 5568 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: வீதி (நெடுஞ்சாலை); கிழக்கு : உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். ஏ எம். சீ. பண்டார என்பவரால் தயாரிக்கப்பட்ட 1999, மே 02 ஆந் திகதியிடப்பட்ட 2367 எனும் வரைபடத்தில் லொட் 6 தற்போது சார்லிஸ் அப்புஹாமி உரிமம் கோரும் காணி ; தெற்கு : 2367 எனும் வரைபடத்தில் லொட் 14 தற்போது பொது வீதி மற்றும்; மேற்கு: மேற்கூறப்பட்ட 2367 எனும் வரைபடத்தில் லொட் 4 தற்போது ஜே. எம். ஆர். எஸ். ஜயசுந்தர உரிமம் கோரும் காணி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் பதினொன்று தசம் ஏழு பேர்ச் (0ஏ. 1றூ. 11.7பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 5568 எனும் வரைபடத்திற்கு அமைவாக குளியாப்பிட்டிய காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் E 184/ 126 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இல. 4775 எனும் ஈட்டு முறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது)

4. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கட்டுகம்பொல மெதபத்து - மேற்கு கோரலே கட்டுகம்பொல ஹத்பத்துவின் பன்னல பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் மோஹோத்தாவ எனும் கிராம அலுவலர் பிரிவின் பாஹால மோஹோத்தாவ கிராமத்தில் அமைந்த "நுககாஹாமுலஹேன" உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். ஏ. எம். சீ. பண்டார என்பவரால் தயாரிக்கப்பட்ட 1999, மாச்சு 26 ஆந் திகதியிடப்பட்ட இல. 2367 எனும் வரைபடத்தில் லொட் 11 மீள் அளவீடு செய்யப்பட்டுள்ளது) என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். ஏ. எம். சீ. பண்டார என்பவரால் தயாரிக்கப்பட்ட 2014, மே 03 ஆந் திகதியிடப்பட்ட இல. 5569 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: கூறப்பட்ட 2367 எனும் வரைபடத்தில் லொட் 14 தற்போது பொது வீதி; கிழக்கு : கூறப்பட்ட இல. 2367 எனும் வரைபடத்தில் லொட் 10 தற்போது சார்லிஸ் அப்புஹாமி உரிமம் கோரும் காணி ; தெற்கு : ஆறு மற்றும் மேற்கு : மேற்கூறப்பட்ட 2367 எனும் வரைபடத்தில் லொட் 12 தற்போது ஜொகீனு அப்புஹாமி உரிமம் கோரும் காணி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு றூட் மற்றும் இருபது பேர்ச் (0ஏ. 2றூ. 20பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 5569 எனும் வரைபடத்திற்கு அமைவாக குளியாபிட்டி காணிப்பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் E 219/89 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். ஏ. எம். சீ. பண்டார என்பவரால் தயாரிக்கப்பட்ட 1999, மாச்சு 26 ஆந் திகதியிடப் பட்ட இல. 2367 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 14 இன் மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

(இல. 4777 எனும் ஈட்டு முறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

6- 682/4

**சம்பத் வங்கி பீ எல் சீ**

( முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கே. வீ. ஜீ. டீ. வீரசிங்ஹ மற்றும் கே. ஏ. ஏ. என். வீரசிங்ஹ
கணக்கு இல.: 0184 5000 1429

2019, ஏப்பிறல் 25 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:-

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு - 2, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக கண்டி பிரசித்த நொத்தாரிசுவான ஜே. சீ. ஆர். ரண்கம என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2013, ஓகத்து 29 ஆந் திகதியிடப்பட்ட இல. 365, 2014 , ஒற்றோபர் 15 ஆந் திகதியிடப்பட்ட இல. 777, 2015, நவெம்பர் 05 ஆந் திகதியிடப்பட்ட இல. 1132, 2016, ஏப்பிறல் 06 ஆந் திகதியிடப்பட்ட இல. 1327, 2016, ஓகத்து 11 ஆந் திகதியிடப்பட்ட இல. 1493 மற்றும் 2018, திசெம்பர் 31 ஆந் திகதியிடப்பட்ட இல. 2704 எனும் ஈட்டு முறிகளின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடமைப்பட்டுள்ளார் என்ற வகையில் கடன்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் குருப்பு ஆரச்சிகே கிஹான் தனுஷ்க்க வீரசிங்ஹ மற்றும் குருப்பு ஆரச்சிகே அசந்தி நிரோஷா வீரசிங்ஹ என்பவர்கள் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், இலக்கங்கள் 365, 777, 1132, 1327, 1493 மற்றும் 2704 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாயில் ஒரு கோடியே ஐந்து இலட்சத்து அறுபத்தி நான்காயிரத்து முந்நூற்று ஐம்பத்தி மூன்று ரூபா தொண்ணூற்றி ஐந்து சதம் (ரூபா 1,05,64,353.95) 2019, மாச்சு 17ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட ஒரு கோடியே ஐந்து இலட்சத்து அறுபத்தி நான்காயிரத்து முந்நூற்று ஐம்பத்தி மூன்று ரூபா தொண்ணூற்றி ஐந்து சதம் (ரூபா 1,05,64,353.95) 2019, மாச்சு 18 ஆந் திகதி முதல் இலக்கங்கள் 365, 777, 1132, 1327, 1493 மற்றும் 2704 எனும் ஈட்டு முறிகளின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஐம்பத்தாறு இலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபா (ரூபா 56,75,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினைந்து தசம் ஐந்து வீதம் (15.5%) மேலும் நாற்பத்தைந்து இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து எண்ணூறு ரூபா (ரூபா 45,32,800.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 365, 777, 1132, 1327, 1493 மற்றும் 2704 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யு. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், கண்டி மாவட்டம், உடகம்பாஹா கோரளே பாத்ததும்பரையின் குண்டசாலை பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் கல்அமுன - இல. 713 கிராம அலுவலர் பிரிவின் ஹுரிகடுவ மெதிகேயில் அமைந்த, வரிமதிப்பீட்டு இல. 45 ஐ ஏற்ற "தம்மகொட்டுவெவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யு. ஏ. பியதாச என்பவரால் தயாரிக்கப்பட்ட 2002, ஏப்பிறல் 02 ஆந் திகதியிடப்பட்ட இல. 128/01/02 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: பிரதேச சபை வீதி; கிழக்கு மற்றும் தென்கிழக்கு : இல. 3595 எனும் வரைபடத்தில் லொட் 2 ; தெற்கு மற்றும் தென் மேற்கு: கடுபோகாஹாமுல ஹேனையை பிரிக்கும் இயற்கை வேலி மற்றும் ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பத்தைந்து பேர்ச் (00ஏ. 0றூ. 35பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 128/01/02 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் 1 மீள் அளவீடு செய்யப்பட்டு கீழ்க் கண்டவாறு நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட ஹுரிகடுவ மெதிகேயில் அமைந்த, "தம்மகொட்டுவெவத்த" என்றழைக்கப்படும காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஆர். சீ. ஓ. டி. லா மோட்டே என்பவரால் தயாரிக்கப்பட்ட 1968, யூலை 10 ஆந் திகதியிடப்பட்ட இல. 3595 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: கி. ச. வீதி ; கிழக்கு மற்றும் தென்கிழக்கு : லொட் 2 (இதே காணியின் எஞ்சிய பகுதி) ; தெற்கு : தவறுதலாக வடக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும்; தென்மேற்கு : கடுபோகாஹாமுல ஹேனையை பிரிக்கும் இயற்கை வேலி மற்றும் ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பத்தைந்து பேர்ச் (0ஏ. 0றூ. 35பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 3595

எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் D 146/09 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

6- 682/2

---

## சம்பத் வங்கி பீ எல் சீ

( முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

என். பீ. சிரியாவத்தி மற்றும் ஜே. கே. ஆர். ஜீவன்
கணக்கு இல.: 0166 5000 3806

2019, ஏப்பிறல் 25 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:-

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு - 2, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசுவான கே. ஏ. டீ சுபசிங்ஹ என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017, நவெம்பர் 10 ஆந் திகதியிடப்பட்ட இல. 4669 மற்றும் 2018, செத்தெம்பர் 18 ஆந் திகதியிடப்பட்ட இல. 5360 எனும் ஈட்டு முறிகளின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடமைப்பட்டுள்ளார் என்ற வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நைவல பதிரன்னேஹேலாகே சிரியாவத்தி மற்றும் ஜயசிங்ஹ கோறலலாகே ரசிக்க ஜீவன் என்பவர்களில் கடன்பட்டவர் எனும் வகையில் நைவல பதிரன்னேஹேலாகே சிரியாவத்தி என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், இலக்கங்கள் 4669 மற்றும் 5360 எனும் இரு ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் அறுபத்தொன்பது இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து இருநூற்று பதின்மூன்று ரூபா எழுபத்தொன்பது சதம் (ரூபா 69,57,213.79) 2019, மாச்சு 17 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட அறுபத்தொன்பது இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து இருநூற்று பதின்மூன்று ரூபா எழுபத்தொன்பது சதம் (ரூபா 69,57,213.79) 2019, மாச்சு18ஆந் திகதி முதல் இலக்கங்கள் 4669 மற்றும் 5360 எனும் ஈட்டு முறிகளின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை அறுபத்தாறு இலட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து எண்ணூற்று நாற்பத் தேழு ரூபா எழுபத்தொரு சதம் (ரூபா 66,79,847.71) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 4669 மற்றும் 5360 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

1. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கட்டுகம்பொல மெதபற்று - மேற்கு கோரலே கட்டுகம்பொல ஹத்பற்றுவின் பன்னல பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச சபை செயலாளர் பிரிவின் பம்மன்ன கிராம அலுவலர் பிரிவின் பம்மன்ன கிராமத்தில் அமைந்த "தெல்காஹாமுலவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவை யாளர் எஸ். பீ. அபேகோன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2002, நவெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 7143 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: வீதி - பிரதேச சபை ; கிழக்கு : இங்கமைந்த லொட் 2 ; தெற்கு : லொட் 7 (முழுக் காணியினதும் பிரிக்கப்பட்ட பகுதி) தற்போது எஸ். எம். என். எஸ். சமரகோன் என்பவர் உரிமம் கோரும் காணி மற்றும் மேற்கு : லொட் 5 (முழுக் காணியினதும் பிரிக்கப்பட்ட பகுதி) தற்போது டபிள்யூ. ஜீ. என். சந்ரசிரி என்பவர் உரிமம் கோரும் காணி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் ஐந்து தசம் ஏழு ஒன்று பேர்ச் (0ஏ. 1றூ. 5.71பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 7143 எனும் வரைபடத்திற்கு அமைவாக குளியாப்பிட்டிய காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் E 211/103 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கட்டுகம்பொல மெதபற்று - மேற்கு கோரலே கட்டுகம்பொல ஹத்பத்துவின் பன்னல பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் பம்மன்ன கிராம அலுவலர் பிரிவின் பம்மன்ன கிராமத்தில் அமைந்த "தெல்காஹாமுலவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். பீ. அபேகோன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2002, நவெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 7143 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் 2 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: வீதி - பிரதேச சபை ; கிழக்கு : லொட் 12 (முழுக் காணியினதும் பிரிக்கப்பட்ட பகுதி) தற்போது

ஏ. எச். எம். கப்பர் என்பவர் உரிமம் கோரும் காணி ; தெற்கு : லொட் 10 (முழுக் காணியினதும் பிரிக்கப்பட்ட பகுதி) தற்போது எஸ். டீ. மர்தேலிஸ் என்பவர் உரிமம் கோரும் காணி மற்றும் லொட் 7 (முழுக் காணியிலிருந்து பிரிக்கப்பட்ட பகுதி) தற்போது எஸ். எம். என். எஸ். சமரகோன் என்பவர் உரிமம் கோரும் காணி மற்றும் மேற்கு : இங்கமைந்த லொட் 1 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு றூட் மற்றும் முப்பத்தி நான்கு தசம் இரண்டு ஒன்பது பேர்ச் (0ஏ. 2றூ. 34.29பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 7143 எனும் வரைபடத்திற்கு அமைவாக குளியாபிட்டிய காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் E 63/135 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

6- 682/5

---

## சம்பத் வங்கி பீ எல் சீ

( முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கே.கே.ஆர். பீ. தயாநந்த
கணக்கு இல.: 1187 5469 0439

2019, ஏப்பிறல் 25 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:-

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு - 2, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசுவான கே. ஏ. டீ. சுபசிங்ஹ என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016, சனவரி 21 ஆந் திகதியிடப்பட்ட இல. 3129 மற்றும் 2018, செத்தெம்பர் 11 ஆந் திகதியிடப்பட்ட இல. 5329 எனும் எனும் ஈட்டு முறிககளின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக் கொண்ட கடனை, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கடமைப்பட்டுள்ளார் எனும் வகையில் கடன்பட்ட காஹாந்த கருணாரத்னகே ரொஷான் பிரசங்க தயாநந்த என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், இலக்கங்கள் 3129 மற்றும் 5329 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாயில் ஒரு கோடியே எழுபத்தைந்து இலட்சத்து ஐயாயிரத்து நாநூற்று எண்பத்தெட்டு ரூபா எழுபத்தாறு சதம் (ரூபா 1,75,05,488.76) 2019, மாச்சு 31 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட ஒரு கோடியே எழுபத்தைந்து இலட்சத்து ஐயாயிரத்து நாநூற்று எண்பத்தெட்டு ரூபா எழுபத்தாறு சதம் (ரூபா 1,75,05,488.76) 2019, ஏப்பிறல் 01 ஆந் திகதி முதல் இலக்கங்கள் 3129 மற்றும் 5329 எனும் ஈட்டு முறிகளின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே அறுபத்தாறு இலட்சத்து எண்பதாயிரம் ரூபா (ரூபா 1,66,80,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 3129 மற்றும் 5329 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கிராதலன கோரலே தேவமெதி ஹத்பத்து படுவஸ்நுவர பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் படுவஸ்நுவர மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் ஹெட்டிபொல கிராம அலுவலர் பிரிவின் ஹெட்டிபொலையில் அமைந்த "கலகாவஹேன்யாய" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். டபிள்யூ. நந்தசேன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2008, மாச்சு 05 ஆந் திகதியிடப்பட்ட இல. 2826 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: எச். எம். அப்புஹாமி உரிமை கோரும் காணி ; கிழக்கு : இதே காணியின் எஞ்சிய பகுதி ; தெற்கு : வீதி (பிரதேச சபை பிரதான வீதியிலிருந்து - போகொள்ள வரை) மற்றும் மேற்கு : நந்தா வீரசூரிய உரிமம் கோரும் காணி. ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் (1ஏ. 0றூ. 0பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2826 எனும் வரைபடத்திற்கு அமைவாக குளியாபிட்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் Q 32/127 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

6- 682/3

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ - தெனியாய கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

*மலித் சேப்பால தஹாநாயக்க*

*ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.*

*"மலித் சேப்பால தஹாநாயக்க கடப்பாடு உடையவராகவும் ஹற்றன் நஷனல்வங்கிபீ.எல்.சீ.சார்பில்,பிரசித்தநொத்தாரிசு டி. டி. அபயவிக்கிரமவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 30.06.2016 ஆந் திகதியிடப்பட்ட 3735 மற்றும் 22.07.2016 ஆந் திகதியிடப்பட்ட 3758 ஆகிய இலக்க முறிகள் மீதான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 1, மாச்சு 2019 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மீது ரூபா 96,34,973.33 (தொண்ணூற்று ஆறு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து தொளாயிரத்து எழுபத்துமூன்று ரூபா முப்பத்துமூன்று சதம்) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட 3735 மற்றும் 3758 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 96,34,973.33 கொண்ட பணத்தொகையை 2, மாச்சு 2019 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடு சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஜே. டபிள்யு, ஈ. ஜயவர்தனாவினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.".*

### அட்டவணை

*1. மேல் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில் உள்ள மொரவக் கோறளவின் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கொட்டப்பொல பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட மொரவக்க கிராம அலுவலர் பிரிவில் உள்ள மொரவக்க கிராமத்தில் உள்ள உடஹிற்றிலந்த மறுபெயர் தனயம்கொட்டெல்ல என அழைக்கப்படும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் ஜி. பி. திலகசிரியினால் தயாரிக்கப்பட்ட 10.12.1990 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 324/ 90 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு இலக்கம் 02. பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணியுடனான முழுவதுமான நிலத்துடன் உள்ள எல்லாவற்றினதும் எல்லைகள் - வடக்கு: அதே காணியின் காணித்துண்டு 01 மற்றும் 03 (8 அடி அகலமான வீதி) ; கிழக்கு : PP40 இல் உள்ள காணித்துண்டு 25E மற்றும் அதே காணியின் காணித்துண்டு 03 ; தெற்கு : PP40 இல் உள்ள காணித்துண்டு 25 ; மேற்கு : அதே காணியின் காணித்துண்டு 01. இருபது தசம் மூன்று மூன்று பேர்ச் (0ஏ. 00றூ. 20.33பே.) விஸ்தீரணத்தைக் கொண்டது.*

